**Deposition of witness**

**(Chapter XXII Code of Criminal Procedure)**
**-----------**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

Calender : அசல் வழக்கு எண்.254/2009

Preliminary Register :

Sessions :

Deposition of Witness for : பி.வா.சா.3.திரு. ராஜா த.பெ.பொன்ராஜ்

Court : District Munsif Court, Melur.

Name :

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 25th day of April 2024

25.04.2024

O.S.No.254/2009

பி.வா.சா.3.திரு. ராஜா த.பெ.பொன்ராஜ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 13ம் பிரதிவாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 01.03.2007 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் சார்பதிவக நகல் அது பி.வா.சா.ஆ**-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.03.2007 தேதியிட்ட கிரைய ஆவணம் சார்பதிவக நகல் அது பி.வா.சா.ஆ**-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.03.2007 தேதியிட்ட சண்டிவீரன் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் சார்பதிவக நகல் அது பி.வா.சா.ஆ**-14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணங்கள் அனைத்தும் முறையான விஸ்தீரணம் மற்றும் நான்குமால்களை குறிப்பிட்டு கிரையம் செய்யவில்லை என்ற வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)** தாவா சொத்தினை காட்டக்கூடிய புகைப்படங்கள் 5 எண்ணிக்கை அது பி.வா.சா.ஆ**-15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணம் புகைப்படம் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)**